
ஒரு இச்சியை சொருகி அதை பெரிய பூசாரியின் வலது கையால் கொடுத்தார்கள். இதைத்தான் "கிலு கிலுப்பை" என்று சொன்னார்கள். அது:-  இப்படியிருந்தது. பிறகு, எலுமிச்சம்-பழம் ஒன்றை பூசாரியின் இடதுகையால் கொடுத்தார்கள். பிறகு, பெரியதனக்காரர் பாளைக்கரகத்தை எடுத்து பெரிய பூசாரியின் தலையில் வைத்து பிடித்துக்கொண்டார். பெரிய பூசாரியை இப்படி நிறுத்தியதும் அவர் முன் வெள்ளைமாத்து விரித்தார்கள். அந்த வெள்ளைமாத்துமேல் புதிதாக எளிதீங்கள் செய்து கொண்ட நாலு தம்பதிகளும், அவர்களுடைய குழந்தைகளும் இப்புற விழுந்து படுத்துக் கொண்டார்கள். அது:-




← இப்படித்தான் இப்புற படுத்துக்-
கொண்டார்கள்.

பிறகு பூசாரிக்கு அருள்வந்து முன்னும் பின்னும் அசைந்து கொண்டே தன் வலது கையால் இருக்கும் கிலு கிலுப்பையை ஆட்டிக் கொண்டே கன்னியாத்தாள்மேல் விருத்தங்கள் சொன்னார். இப்படி அமார் ½ மணிநேரம் விருத்தங்கள் சொன்ன பிறகு கடைசியாக "மடியில் அரிசிகட்டி மங்காமை நாவளத்தரை, சிரகில் அரிசிகட்டி சிந்தாமை வளத்தரை ஏந்திரீங்க" என்று பெரிய பூசாரி சொன்னார். அப்படி சொன்னவுடன் இப்புற படுத்திருந்தவர்கள் எல்லோரும் எழுந்து கொண்டார்கள். பிறகு, எளிதீஸ்கள் செய்து கொண்டவர்களில் ஒரு ஆணும் அவனுடைய மாமன் மைத்துனர்களில் யாரோ ஒருவரும் ஆக இருவரும் பெரிய பூசாரி முன் இப்புற விழுந்து படுத்துக்-கொண்டார்கள். அப்போதும் பெரியபூசாரி சில விருத்தங்கள் சொல்லி பிறகு, "மடியில் அரிசிகட்டி மங்காமை நாவளத்தரை சிரகில் அரிசிகட்டி சிந்தாமை நாவளத்தரை ஏந்திரீங்க என்று-

